செ.வெ.எண்.80 நாள்.24.07.2017.

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 29 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 7 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்கள்.**

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.07.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், திரு.சங்கரராஜ் என்பவர் ஓமன் நாட்டியில் பணியில் இருக்கும்போது 31.12.2016 அன்று காலமானதற்கு வரப்பெற்ற இழப்பீட்டுத் தொகையினை அன்னாரின் தந்தை திரு.வெங்கடேசன் அவர்களிடம் ரூ.11,71,356/–த்திற்கான காசோலையினையும், கடந்த வாரம் (17.07.2017) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இராதாபுரம் வட்டம், பணகுடி, தளவாய்புரத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளி திரு.ஏ.வைகுண்டசாமி என்பவர் உதவித் தொகை வேண்டி விண்ணப்பித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அன்னாரின் விண்ணப்பத்தின் மீது உடனடி நடவடிக்கை எடுத்து, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினை வழங்கினார்.

வீரகேரளம்புதூர் வட்டத்தினை சார்ந்த 2 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 2 நபர்களுக்கு விதவை உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், ஒரு நபருக்கு ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினையும், பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 20 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், திருநெல்வேலி வட்டத்தைச் சார்ந்த 9 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.செண்பகவல்லி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.